பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.30 .05.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு மே மாதம் 31ம் நாள் (31.05.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

<table>
<tr><td>பொருள்.1</td><td>பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் மற்றும் மே 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>பொருள்.2</td><td>பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் மற்றும் மே 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>பொருள்.3</td><td>பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஏப்ரல் மற்றும் மே மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>பொருள்.4</td><td>இந்நகராட்சி பொது சுகாதார டம்பர் பிளேசர் வாகனம் TN 65 W 0802க்கு பிரேக் பூஸ்டர் சிலிண்டர் கிட், அசம்பில் கம்பிலீட் போன்ற பழுது பணிகளால் வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அதன் பொருட்டு பழுது பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஒட்டுநர் தெரிவித்தன் அடிப்படையில் பொது சுகாதார அவசரஅவசியம் கருதி Section 15ன் படி சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 22.04.2019 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>பழுதுப்பணிகள் விபரம்</th><th>என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிவனத்தினத்தின் விலைப்புள்ளிகள்</th><th>செந்தில் மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிகள்</th></tr>
<tr><td>1</td><td>டம்பர் பிளேசர் லாரி TN65 W 0802க்கு பழுதுப் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.8000/–</td><td>ரூ.8500/–</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுப் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் பின் ஏற்பினை எதிர்நோக்கி Section 15ன் படி பணி உத்தரவு வழங்கப்பட்தற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு–<br>
1) மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
2) பொது சுகாதார அவசரஅவசியம் கருதி Section 15ன் படி சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
3) குறைந்த தொகைக்கு பழுதுப் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு Section 15ன் படி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td></tr>
</table>

| | |
|---|---|
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 7th SHPC–யின் கீழ் பாம்பு விழுந்தான் கிராமத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பழைய திடக்கழிவுகளை தரம் பிரித்து அப்புறப்படுத்தும் பணி (Bio Mining) ரூ. 565.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி பணியில் அவ்வப்பொழுது Heap முறையில் அளவீடு செய்தும் அவற்றை சரிபார்த்து அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினரிடம் சான்று பெற்று அதன்பின் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>அதன்படி மேற்படி பணியை சுற்றுச்சூழல் பயிற்சிமையம், சென்னை நிறுவனத்தின் மூலம் ஆய்வுப்பணி மேற்கொண்டதில் மேற்படி நிறுவனம் அவ்வப்பொழுது பழைய திடக்கழிவு குப்பைகளை தரம் பிரித்து அப்புறப்படுத்தும் முன்னர் அளவீடு செய்தும் (Heap முறையில்) அவற்றை சரிபார்த்தும் சான்று வழங்குதல் மற்றும் உரிய ஆலோசனை வழங்குவதற்கும் கட்டணம் ரூ.11.80/– லட்சம் செலுத்துமாறு 12.03.19 அன்றைய கடிதத்தில் தெரிவிக்கபட்டுள்ளது. எனவே மேற்படி திட்டப்பணியை மேற்கொள்ள உரிய ஆலோசனை மற்றும் அவ்வப்பொழுது அளவீடு செய்துள்ள குப்பைகளை (Heap முறையில்) சரிபார்த்து சான்று வழங்கும் பொருட்டு உரிய கட்டணம் ரூ.11.80 லட்சத்தை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை திட்டப்பணிக்கான நிதியிலிருந்து ஈடுசெய்யலாம்.<br>3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| பொருள்.6 | இராமநாதபுரம் மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரிய சுற்றுசூழல் பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.F.0299 RMD/GS/DEE/TNPCB/RMD/W&A /2018 நாள்.15.02.2019ன் படி பரமக்குடி நகராட்சி மஞ்சள்பட்டிணம் பகுதியில் உள்ள மின் மயானத்திற்கு 2018–2020 வரையான காலத்திற்கு இசைவு கட்டணம் (Consent for renevel) செலுத்த கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி காலத்திற்கான இசைவு கட்டணம் ரூ.15,500/– இந்நகராட்சி மூலம் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. தமிழக அரசின் திருத்தப்பட்ட இசைவு கட்டணத் தொகையின்படி ரூ.14,200/– செலுத்தப்பட வேண்டும். மேற்படி வித்தியாசத் தொகை ரூ.3,700/– (14,200–10,500) செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இசைவு கட்டணம் ரூ. 3,700/– மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை அங்கீகரிக்கலாம். |
| பொருள்.7 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (7th SHPC) இந்நகராட்சிக்கு 19 எண்ணம் முதல்நிலை சேகரிப்பு பணிக்கான பேட்டரியால் இயங்கும் வாகனம் வாங்கப்பட்டுள்ளது. மேலும் 8th SHPC மூலம் கூடுதலாக 32 எண்ணம் பேட்டரியால் இயங்கும் வாகனம் வாங்குவதற்கு வேலை உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வாங்கப்பட்ட வாகனங்களை நிறுத்துவதற்கு போதுமான செட் அமைத்து பேட்டரிகள் சார்ஜ் போட மின்வசதிகள் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யவும், இதர பிரதான குழாய்கள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யவும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு–<br>மேற்படி பணிமேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது. |
| பொருள்.9 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பாம்பு விழுந்தான் உரக்கிடங்கில் மட்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரம் மற்றும் சலிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதை இயக்குவதற்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த அலுமினிய கேபிள் உயர் மின்அழுத்தம் காரணமாக சேதமடைந்துவிட்டதால் இயந்திரங்கள் இயங்காமல் உள்ளதை இயங்க வைக்க புதிதாக 25எம்.எம் 4 ஸ்கொயர் எம்.எம். காப்பர் யூஜி கேபிள் மற்றும் அதற்கான உபகரணங்கள் வாங்கி பொருத்த ரூ.1.40 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி மேற்படி இயந்திரங்களை இயங்க வைக்கும் பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.1,40,000/– செலவினம் மேற்கொள்ள .04.2019 அன்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.<br><br>1. M/S பர்வதா எலக்ட்ரிக் ஸ்டோர், பரமக்குடி. – ரூ.1,37,295/–<br>2. M/S சுபா லைட்டிங், பரமக்குடி. – ரூ.1,37,800/–<br>3. M/S பர்வதா கார்ப்ரேசன், பரமக்குடி. – ரூ.1,38,378/–<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் பர்வதா எலக்ட்ரிக் ஸ்டோர், பரமக்குடி. நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொள்ளலாம். மேலும், அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளியினை ஏற்று உத்தரவு வழங்கி பணி செய்து முடித்ததையும், அதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, 32, 23 மற்றும் 21 ஆகிய வார்டுகளில் ஆங்காங்கே வடிகால் பழுதடைந்தும் சிறுபாலங்கள் உடைந்த நிலையில் உள்ளது. இதனால் கழிவுநீர் தேங்கிநின்று சுகாதார கேடு விளைவிக்க வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் சுகாதார நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சிறுபாலங்கள் மற்றும் வடிகால் மராமத்துப்பணி ரூ.150000/–க்கு தயாரிக்கப்பட்டடுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.11 | பரமக்குடி நகராட்சி பராமரிப்பில் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள சமுதாய மற்றும் பொதுகழிப்பறை கட்டிடங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் கழிப்பறையில் நச்சுத்தொட்டி, கதவு, கோப்பைகள் மற்றும் தளம் பழுதடைந்தும் உள்ளது. இதனால் பொதுமக்கள் மேற்படி கழிப்பளைகளை பயன்படுத்துவதில் இடையூராக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கழிப்பறைகளில் மராமத்துப் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.6.80 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் மேற்படி பணியை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| பொருள்.12 | பரமக்குடி நகராட்சியில் குழல் விளக்குகள் 1827 எண்ணம், 150, 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் –220 எண்ணம், உயர்கோபுர விளக்குகள் – 3 எண்ணம் 1x24 வாட்ஸ் டி5 விளக்குகள் –135 எண்ணம், 2x24 வாட்ஸ் டி5 –155 எண்ணம், 4x24 வாட்ஸ் டி5 –124 எண்ணம் 65 வாட்ஸ் சி.எப்.எல் விளக்குகள் – 279 எண்ணம் ஆக மொத்தம் 2770 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு பராமரிப்புப்பணிக்கு மின்கம்பியாளர் 3 இடம் மற்றும் மின்கம்பி உதவியாளர் 3 இடம் பணி அனுமதிக்கப்பட்டு பராமரிப்புப்பணி பார்க்கப்பட்டு வந்தது. தற்பொழுது 2 மின்கம்பியாளர்கள் ஓய்வு பெற்றதை தொடர்ந்து 2 மின்கம்பி உதவியாளர்கள், மின்கம்பியாளராக பதவி உயர்வு பெற்று பணி செய்து வருகிறார்கள். பதவி உயர்வு அளிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் 2 இடமும் காலியாக உள்ளது.<br>தெருவிளக்கு பணிகளை தனியார் மயமாக்குவதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி 2 இடங்கள் காலியாக இருப்பதால் பராமரிப்புப்பணியில் தொய்வு ஏற்படுகிறது. மேலும் மழைகாலமாக இருப்பதாலும், தெருவிளக்கு பராமரிப்புப்பணியை தொய்வின்றி செய்வதற்கு காலியாக உள்ள மின்கம்பி உதவியாளர் 4 நபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டி விலைவிகிதத்தின்படி தனியார் மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு தெருவிளக்குப்பணி தொய்வின்றி நடைபெறுவதற்கு ஜுலை 2019 முதல் சுமார் 6 மாத காலத்திற்கு ஊதியம் வழங்க ரூ.3,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் பிரிவு பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் துப்புரவுப்பிரிவில் பணியாற்றி வரும் பணியாளர்களை Working arrangement மாற்றுப்பணி அடிப்படையில் பணி செய்து வருகிறார்கள். மேலும், காவலர் பணியிடம் 2 எண்ணம் மற்றும் நீரேற்று நிலைய காவலர் பணியிடம் 2 எண்ணம் மற்றும் மின்பணியாளர் 5 எண்ணம் காலியாக உள்ளது. மேலும், இந்நகர் பகுதிகளில் 20 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 169 எண்ணம் சிறுமின் விசைப்பம்புகள் செயல்பட்டு வருகிறது. அவற்றில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மேற்கொள்ளவும் மின்பணியாளர் குடிநீர் பிரிவிற்கென போதிய பணியாளர்கள் இல்லை.<br>எனவே, குடிநீர் விநியோக அவசியப்பணியினை தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு 4 பணியிடங்கள் காலியாக உள்ளதாலும், குடிநீர் விநியோக பணிக்கு 3 நபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டி விலைவிகிதத்தின்படி 01.07.2019 முதல் 6 மாத காலத்திற்கு தனியார் மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு குடிநீர் விநியோகப்பணிகளை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.14 | பரமக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் ஆணையாளர் அறையில் உள்ள பழைய பழுதடைந்த குளிர்சாதன பெட்டியை அகற்றி விட்டு புதிதாக குளிர்சாதன பெட்டி பொருத்தவும் மற்றும் புதிய அலுவலக கட்டிடத்தின் உட்புறம் பொறியியல் பிரிவு எழுத்தருக்கு இருக்கை வசதி செய்யும் பொருட்டு அலுமினியம் தடுப்பு அமைக்கவும் மற்றும் கதவு பொருத்தும் பணிக்கு ரூ.1,05,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் 2017–18 மற்றும் 2018–19ம் ஆண்டு விபரங்களை தமிழ் நாளிதழ்களில் சிறப்பு மலராக வெளியிட மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண்.176/செமதொ/2018, நாள்.11.09.2018ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க தினகரன் நாளிதழ் சிறப்பு மலரில் வெளியிட்ட வகைக்கு ரூ.23389/–ஐ, தினகரன் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.16 | அரசாணை (நிலை) எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள்.05.04.2018ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் நகர சுகாதார செவிலியருக்கு ஆண்டு சீருடைப்படி ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் நகர்நல செவிலியர்கள் (மகப்பேறு உதவியாளர்கள்) ஆண்டு சீருடைப்படி ரூ.1000 ஆக உயர்த்தி வழங்குமாறு கோரியுள்ளனர். எனவே, இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் மூன்று நகர சுகாதார செவிலியர்களுக்கும் தலா ரூ.1000 வீதம் 2017–18 மற்றும் 2018–19ம் ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.3000/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.6000/– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.17 | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவுப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் திரு. சி. முத்துமணி (கடந்த 30.06.2017ல் ஓய்வு) மற்றும் 21 நபர்களால் பணிவரன்முறை மற்றும் ஓய்வூதிய பயன்களுக்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.21040/2017ன் வழியாக வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை செயலாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி ஆணையாளர், பரமக்குடி ஆகியோர் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் திரு. எம். கண்ணன் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் நகராட்சியின் சார்பாக ஆஜராகி உள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அரசு கூடுதல் வழக்குறைஞர் திரு. சி.எம். மாரி செல்லையா பிரவு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை செயலாளர் அவர்கள் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சார்பாக ஆஜராகி உள்ளார். எனவே, மேற்கண்ட வழக்கிற்கு வழக்கு கட்டணமாக உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் வர்ணங்கள் மங்கலாகவும், பொலிவிழந்தும் உள்ளதாலும், கட்டிடத்தில் பராமரிப்பில் பணிகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், தற்சமயம் ஆணையர் இல்லாததால் கட்டிடம் காலியாக உள்ளதால், மராமத்து பணிகளும், வர்ணம் பூசும் பணிகளும் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,40,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு –பி, பிளாக்–2, நகரபுல எண்.7/1, 2994.64 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகஙகை அவர்களின் செயல்முறை ஆணை எண்.8357/2018/சிம2, நாள்.21.01.2019 மனைப்பிரிவு வரைபடத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காக்களை இனாம் சாசனம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக்குறிப்பு – <br> 1. மன்றம் அனுமதிக்கலாம். <br> 2. அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்கள் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காங்களை வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம். <br> ந.க.எண்.328/2019/எப்2 |
| பொருள்.20 | பரமக்குடி நகரம் – பர்மா காலனி, முதுகுளத்தூர் ரோடு பகுதியில் வசித்து வரும் திருமதி. ரேவதி என்பவர் நகராட்சி ஆணையாளர் அவர்களை 4ம் பிரதிவாதியாக கொண்டு வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பரமக்குடியில் வழக்கு எண்.O.S.No.22/2018 I.A.No.180/2019ன்படி தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு விசாரணை 04.06.2019ல் பரமக்குடி நீதிமன்றத்தில் வரஉள்ளதால் ஆணையாளர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்த திரு. இளங்கோவன், வழக்கறிஞர் அவர்களை அனுமதிக்கவும், வழக்கிற்கான செலவு தொகையினை அலுவலகத்தின் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.21 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு –பி, பிளாக்–3, நகரளவை எண்.7ல் சர்வே 129 மொத்த பரப்பளவு 50747.16 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அரசாணை எண்ண்78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை 04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.3190/2018/சிம2, நாள்.09.05.2019 மனைப்பிரிவு வரைபடத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காக்களை இனாம் சாசனம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்கள் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காக்களை வரைபடத்தில குறிப்பிட்டுள்ளபடி தானப்பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.1411/2019/எப்2</td></tr>
<tr><td>பொருள்.22</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு–இ, பிளாக்–4 அமைந்துள்ள நகரபுல எண்.5/5ஏ1ஏ, 10/1ஏ மொத்த பரப்பளவு 7848.00 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.13.10.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், சிவகங்கை அவர்களின் ந.க.எண்.5463/2018/சிம2, நாள்.31.01.2019ன்படி செயல்முறை ஆணைப்படியும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காக்களை இனாம் சாசனம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படியும் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்கள் வழங்கியுள்ள செயல்முறைப்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காக்கள் வரைபடத்தல் குறிப்பிட்டுள்ளபடி தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.23</td><td>

**CHAPTER I**

**BACKGROUND**

**INTRODUCTION**

Managing waste properly is essential for building a sustainable and liveable habitat but remains a challenge for any urban local body in India today. Rapid





**Figure 1: Approach of waste management-Government of Tamil Nadu**

urbanisation and changing lifestyles have led to the generation of huge amounts of garbage and waste in the urban areas, so much so, over the past few years, just handling this Municipal Solid Waste (MSW) has assumed the proportion of a major organizational, financial and environmental challenge.

</td></tr>
</table>

Recognising this Ministry of Environment & Forests (MoEF), Govt. of India had notified Municipal Solid Waste (Management & Handling) Rules, 2000 which was subsequently revised into Solid Waste Management Rules 2016. The above rule mandates each Urban Local body to frame Policy on Solid Waste management and Solid Waste Management Action Plan to address the growing concern of waste management in the concerned town.

**SOLID WASTE MANAGEMENT RULES 2016**

The responsibilities of various Ministries, Departments and local bodies for sustainable solid waste management have been highlighted in the SWM Rules 2016.

**DUTIES OF LOCAL BODIES**

It has been emphasised that it is the Duty of local bodies (as the prime responder for Solid waste management) to carry out the Collection, Transportation and Disposal of Solid waste in a scientific manner on day to day basis. The rule further facilitates the local bodies to apply penalty clause for the effective enforcement of the rule apart from the user charges. Accordingly bye-laws had been framed by the Paramakudi Municipality and published in the District gazette on 07.08.2017.

**DUTIES OF WASTE GENERATORS**

Moreover, the Duty of Waste generators to segregate the waste at source as Biodegradable & Non-biodegradable and handing over the same to waste collectors authorised by the local bodies has also been prescribed. In a bid to encourage this and improve stakeholder participation for achieving zero littering (in open public spaces, drains, and water bodies) and to slash open burning, extensive awareness programs have been directed to be carried out by local bodies.

**DECENTRALISING THE WASTE MANAGEMENT PROCESS**

Further the rule reduces the burden of local bodies by introducing the concept of Bulk waste generator and Decentralising the waste management process. Considering this, Government of Tamil Nadu has adopted a holistic State policy towards Sustainable Waste Management. In accordance with this, Action plan for Paramakudi Municipality is framed.

**STATE POLICY ON SOLID WASTE MANAGEMENT GOVERNMENT OF TAMIL NADU**

The changing urban life style has resulted in both positive and negative effects. While the standard of living condition has considerably improved, a large volume of solid waste has become its bye product. Many new approaches have been adopted to process these wastes in a sustainable manner.

**ZERO-WASTE CONCEPT**

The Government of Tamil Nadu has felt the necessity to frame a State policy to cater to the needs of Solid waste management covering right from Primary collection to scientific processing and disposal of the Municipal Solid Waste in an eco-friendly manner. The policy is drafted in such a way that it provides necessary guidance to dispose all type and nature of waste generated scientifically to achieve the zero-waste concept. Each and Every aspect of waste

such as Bio &Non- biodegradable waste (both recyclable and Non-recyclable), Domestic Hazardous waste, E-waste, street sweeping waste, highly littered public places with mixed wastes etc., are considered. The policy focuses on the technology suitable for the urban local bodies based on the Quality and the Quantity of waste that is being generated.

**INFORMATION EDUCATION AND COMMUNICATION (IEC) ACTIVITIES**

Apart from this, Bulk waste generators are activated to develop onsite facilities for handling the waste generated by them. Moreover, Continuous and rigorous IEC programs are emphasized to inculcate behavioral changes among the public to encourage Source segregation.

# CHAPTER- II

# PRESENT STATUS OF SOLID WASTE MANAGEMENT IN PARAMAKUDI MUNICIPALITY

## DOOR TO DOOR COLLECTION AND SEGREGATION

Paramakudi Municipality is situated 35 Km. away from the Eastern side of Ramanathapuram, Northern side of Karaikudi and Southern side of Muthukulathur. Paramakudi Municipality was constituted as grade III Municipality with effect from 1.4.1964 as per G.O.MS.No.395 Dated 20.1.64 and upgraded as grade II Municipality with effect from 1.5.1976 as per G.O and it was upgraded as Grade I Municipality on 22.05.1998 as per G.O.MS.No.85

The town is divided into 36 wards and population is 95000 as per 2011 Census. The ULB has one Bus stand. The people of Paramakudi have the prime business of Weaving Silk sarees. No. of households are 24703 with 4697 commercial establishments.

- ✓ The wet waste are collected at Door steps every day.
- ✓ The dry waste is being collected once in a week i.e Wednesday
- ✓ The Domestic Hazardous waste such as Napkin, Diaper collected along with wet waste.
- ✓ E Waste, other domestic hazardous waste and C&D waste collection to be practiced.
- ✓ Animators are involved in imparting the practice of Source segregation through Behavioral change.

**Table 1: % of D2D collection & source segregation**

| | |
|---|---|
| Waste Generation | 35 TPD |
| Door to Door Collection% | 100 % |
| Source Segregation % | 95% |

## QUANTITY OF WASTE GENERATION

Paramakudi Municipality generates a total of 35.00 MT/Day of Solid waste with a per capita generation of 270 gms./day/person. In the whole town, all SWM processing activities is covered

under three MCCs in three different locations and 20 onsite composting centers. Out of 36 wards about 7 wards are situated scatterly. The residents in these areas render their co-operation to ULB

by practicing home composting at their backyards.50 no of land available households practicing Home compost. However considering the total population processing facilities are planned.

**Table 2: Waste Generation**

| Source of Waste | No. of HH/ Assessment | Per Capita Waste generation (in grams) | Waste Generation in TPD | | | Inert, Silt and C & D Waste TPD | Total Waste Generation in TPD |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Wet Waste | Dry Waste | Total | | |
| **Domestic** | 24703 | 270 | 17.7 | 8.00 | 25.7 | 3.6 | 35 |
| **Commercial** | 4697 | - | 1.60 | 1.10 | 2.7 | | |
| **BWG** | 43 | - | 1.70 | 1.30 | 3.00 | | |
| **Industrial** | - | - | - | - | - | | |
| **Total** | **29443** | **270** | **21** | **10.4** | **31.4** | **3.6** | **35** |

Note: BWGs are handling their waste themselves as, discussed in section 2.3.

**COLLECTION AND TRANSPORTATION**

- Tri cycles are used at 250 HH/vehicle /day (covering 2 to 3 Trips)
- LCV vehicles are used at 1200 HH/Vehicle/day (covering 2 to 3 Trips)
- Primary collection at Door steps is being done and wastes collected are directly transported to processing centre. This is being done using
  - ✓ 61 Tri Cycles and 4 LCVs for 24703 HHs
  - ✓ 1 no. Tipper and 1 No. LCV for 4697 Commercial establishments
  - ✓ 1 Tipper Lorry for C&D Waste
  - ✓ Secondary collection and Transportation fully achieved.
  - ✓ 1 Tractor for Market waste
- 49 BWGs have been identified in Paramakudi Municipality comprising 43 Kalyana Mandapams and 6 Schools. Register related to the BWG are being maintained as per the guidelines provided in the SWM Rules 2016 and CPHEEO manual.

Total waste generated to the tune of 3.00 TPD is being handled by the BWGs themselves by decentralized facility. In this way about 10% of waste is reduced by the Municipality at the collection stage itself as per the provisions of SWM Rules 2016

**PROCESSING STATUS ON DISPOSAL OF SOLID WASTE**

- ✓ Partially handled, processed and converted as compost
- ✓ Micro level compost centre are being established on Decentralized basis by dividing the town into 3 segments (covering 9 to 10 wards) in 3 Locations.
- ✓ At present 50 households are practicing home composting processing about 0.04 TPD of wet waste (bio degradable waste).
- ✓ Saleable Dry wastes such as Recyclable plastic waste are sold to recyclers and the workers are permitted to share the monetary benefits.

# CHAPTER-III

# ISSUES AND SHORTFALL

The Major issues such as (i) Inadequate planning (ii) In house capabilities (iii) Lack of Public awareness and Community Participation in segregation of Waste and handling of Waste (iv) Inadequate processing facilities (v) Improper implementation strategy have been considered and accordingly the gap analysis in each activity of Solid Waste Management is done in Paramakudi Municipality.

**ISSUES IN COLLECTION AND TRANSPORTATION**

- ✓ Requirements of primary collection vehicle are arrived based on the type of vehicles, capacity of the vehicle and number of trips per vehicle based on the types of source from where the waste has to be collected. Finally the "Gap" is analyzed to take action to procure adequately.
- ✓ Route chart and Trip chart for each vehicle with designated sanitary workers are to be planned and followed.
- ✓ Adequate awareness among the citizen has to be done sustainably.

**ISSUES IN SCIENTIFIC PROCESSING AND DISPOSAL**

- ✓ Insufficient manpower with adequate knowledge in processing at compost yard
- ✓ Wet waste disposal technology has to be finalized based on the quantity, quality and characteristic of solid waste in Paramakudi Municipality.
- ✓ Dry waste disposal mechanism has to be derived.

**ISSUES IN IN-HOUSE CAPABILITIES**

- ✓ All the staff involved in SWM has to be periodically provided with training on methodology and technology to keep them with updated skill knowledge.
- ✓ The shortfall in man power to address the SWM has to be determined by conducting GAP analysis
- ✓ Paramakudi municipality is entitled to engage 417 no. of sanitary workers as per GO Ms. No. 101. Dated 30.04.97.
- ✓ Permission has been accorded for engaging 259 sanitary workers through outsourcing
- ✓ At present, only 259 no's of sanitary workers (74 permanent and 185 outsourced) are engaged in the collection process.

Action has to be taken to have adequate sanitary workers and supervising staff.

# CHAPTER- IV

# VISION, GOALS & OBJECTIVES ON SWM FOR PARAMAKUDI MUNICIPALITY

**VISION**

To provide better quality of life to the people of Paramakudi Municipality and to make the town livable through sustainable Solid Waste Management strategy.

**GOAL**

(i) To have high standard of cleanliness in Paramakudi Municipality

(ii) To ensure 100% Door to Door collection of the waste and prohibition of unhygienic system of disposal by the households.

(iii) To ensure 100% waste segregation at source

(iv) To promote the practice of Reduce, Reuse, Recycle and Recover

(v) To have "No Landfill Concept"

(vi) To achieve "Zero Waste Concept"

**POLICY OBJECTIVE**

Objectives shall endeavor to

a) Protect public health and environment

b) Make the citizen to realize the responsibility and accountability on SWM

c) Minimizing the generation of Solid Waste through sustainable IEC on 4R Concept

d) Involving the community groups such as RWA, CBOs, SHGs to ensure community participation in Managing and minimizing the municipal solid waste locally.

e) Conduct periodical meeting and discussion to dispose the wet waste through composting process and to promote bio manure

f) Provide integrated solution to dispose the solid waste (both wet and dry waste) with cost effective and efficient delivery of service

g) Dispose the dry waste through the vendors

Build in capacity of Municipal staffs through periodical training.

a) Promote "Green cross" society in educational institutions to impart the necessity of SWM to keep the town with livable condition.

b) Promote the town to have better star rating in SWM

c) Make the SWM services self-sustaining by collecting user

charges to cover Operation & Maintenance cost of the services and levy taxes to meet out the cost of capital investment.

d) Follow the polluter pay principle to bear the cost associated for damaging the environment

Culminate the practice of throwing the waste in to the water bodies and culminate the practice of burning the garbage on road sides.

# CHAPTER- V

# IMPLEMENTATION STRATEGY

**Implementation strategy**

| | |
|---|---|
| Door to Door Collection | • Wet waste collection on daily basis<br>• Dry waste collection on weekly basis (every Wednesday)<br>• Domestic Hazardous waste such as Diaper and Napkins etc., will be collected separately during wet waste collection on daily basis<br>• Other Hazardous waste such as Tubelight, Paint and Chemical containers etc., will be collected on monthly basis.<br>• E waste collection on monthly basis<br>• C & D waste on need basis<br>• Waste will not be collected from the Bulk waste generators |
| Source Segregation | • 100 % at Source Segregation ensured through sustainable IEC activities engaging Animators( Green Ambassadors) |
| Transportation | • Primary collection at door step using Battery operated vehicles and Light commercial vehicles with proper route chart and trip chart<br>• Eliminating Secondary storage Bins on roadside<br>• Minimizing secondary transportation |

| | |
|---|---|
| Scientific Disposal of Waste | • Disposal of wet waste through composing and Establishing Micro level Compost Centers , On Site Composting Centers on Decentralized approach for processing and disposal of wet waste and green waste<br>• Bio gas technology for food waste and slaughterhouse waste<br>• Disposing the dry waste to the identified vendors for recycling<br>• Plastic waste and other recyclable waste to dispose to the recyclers<br>• Other non recyclable but combustible waste to dispose to the vendors who need it for use as furnace fuel or to dispose through Pyrolysis plant through PPP mode.<br>• Other non recyclable and non combustible waste and silt are disposed along with C & D waste<br>• Dead animals disposed scientifically through burial method in the earmarked site<br>• Hazardous waste and E waste to collect and store at Resource Recovery Center by Municipality and periodically dispose the same to PCB for further process<br>• C & D waste to collect and store in the earmarked location<br>•<br>•<br>• and to use on needy basis. |
| IEC activities , Capacity buildings and motivation | • Periodical meeting with RWAs , NGOs, elected body members Bulk Waste Generators and periodical training to sanitary workers<br>• Updating the knowledge of the personnel involving in SWM |

**SWM MONITORING CELL**

The Municipality will constitute a SWM Monitoring Committee under the Chairmanship of Municipal Chairman comprising the Commissioner as Member secretary and five other members including Sanitary officer , Engineer , Town planning officer, and two elected representatives. This committee will meet once in a month and discuss the implementation strategy and facilitate the ULB for implementation of SWM.

**HOME COMPOSTING**

Municipality will take all effort to promote the Home Composting practice among the citizen through intensive campaigning.

அலுவலகக்குறிப்பு –

Solid Waste Management Policy யினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்.24 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு பகுதிகளில் உள்ள மனைகளை வரன்முறைப்படுத்துதல் திட்ட அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை |

நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பரமக்குடி நகராட்சி பகுதியில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா இடங்கள் கீழ்காணும் பட்டியலில் உள்ளவாறு இனம் சாசனம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும், மேற்படி இடங்களை நகராட்சி ஆணையாளர் பெயரில் நகரளவை ஆவணங்களில் பட்டா மாறுதல் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | மனைப்பிரிவு உரிமையாளர் பெயர் | சர்வே எண் விபரம் | பொது ஒதுக்கீடு விபரம் | மனைப்பிரிவு எண் | தானப்பத்திர எண் மற்றும் நாள் | மொத்தமனைகள் | விற்பனை செய்யப்படாத மனைகள் (ம) விஸ்தீரணம் ச.மீ | முறைப்படுத்தல் கட்டணம் | வளர்ச்சி கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஐ.இளங்கோ & சக்தி | வார்டு.பி, பிளாக்.3, நகரபுல எண்.6/3 | 288.73 ச.மீ | 234/2018 | Doc No.1608 நாள்.18.05.2018 | 48 | 28 2595.95 | 155760 | 389400 |
| 2 | எல்.ஆரோக்கியம் | வார்டு.பி, பிளாக்.1, நகரபுல எண்.11/4பி1 | 79.47ச.மீ | 307/2018 | Doc No.2089 நாள்.22.06.2018 | 10 | 7 692.60 | 41580 | 103950 |
| 3 | சங்கிலி | வார்டு.பி, பிளாக்.1, நகரபுல எண்.11/8, 11/10pt | 60.94 ச.மீ | 364/2018 | Doc No.2356 நாள்.12.07.2018 | 15 | 6 547.52 | 32880 | 82200 |
| 4 | கே.செல்வராஜ் | வார்டு.பி, பிளாக்.4, நகரபுல எண்.6/7 pt | 91.44 ச.மீ | 450/2018 | Doc No.3606 நாள்.10.10.2018 | 15 | 6 799.31 | 48000 | 120000 |
| 5 | எம்.சிவாராணி | வார்டு.சி, பிளாக்.1, நகரபுல எண்.3 pt | 321.30ச.மீ | 557/2018 | Doc No.3269 நாள்.18.09.2018 | 114 | 27 2740.27 | 164460 | 411150 |
| 6 | எல்.கிருஷ்ணமூர்த்தி | வார்டு.பி, பிளாக்.1, நகரபுல எண்.11/9 pt | 23.41 ச.மீ | 721/2018 | Doc No.3612 நாள்.11.10.2018 | 12 | 1+1pt 209.71 | 7020 | 31500 |
| 7 | இராமதாஸ் | வார்டு.பி, பிளாக்.2, நகரபுல எண்.3/18ஏ | 43.70 ச.மீ | 760/2018 | Doc No.3821 நாள்.30.10.2018 | 6 | 3+1 pt 392.27 | 23580 | 58950 |
| 8 | செ.பூமிநாதன், பா.முருே | வார்டு.இ, பிளாக்.3, நகரபுல | 108.40 ச.மீ | 686/2018 | Doc No.4104 நாள்.23.11.2 | 15 | 8+1 pt 973.20 | 58440 | 146100 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கசன் | எண்.4/7 | | | 018 | | | | |
| 9 | த.மோகன் ராஜ் | வார்டு.எச், பிளாக்.36, நகரபுல எண்.4/5,4/6 | 267.56 ச.மீ | 653/2018 | Doc No.3611 நாள்.10.10.2018 | 30 | 21 2408.05 | 144600 | 361500 |
| 10 | தங்கவேல் உடையார் டி.பன்னீர் செல்வம் | வார்டு.பி, பிளாக்.4, நகரபுல எண்.7/2 | 376.42 ச.மீ | 877/2018 | Doc No.4403/2018, 4335/2018 நாள்.12.12.2018 | 61 | 28+1 pt 3367.17 | 224640 | 561600 |

மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் விற்கப்படாத மனைகள் அனைத்திற்கும் உரிய வளர்ச்சிக்கட்டணம் மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்தியுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலகக்குறிப்பு –

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்களை அவர்கள் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காங்களை வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தானபத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். /2019/எப்2

**பொருள்.25**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு பகுதிகளில் உள்ள மனைகளை வரன்முறைப்படுத்துதல் திட்ட அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பரமக்குடி நகராட்சி பகுதியில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா இடங்கள் கீழ்காணும் பட்டியலில் உள்ளவாறு இனம் சாசனம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும், மேற்படி இடங்களை நகராட்சி ஆணையாளர் பெயரில் நகரளவை ஆவணங்களில் பட்டா மாறுதல் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மனைப்பிரிவு உரிமையாளர் பெயர் | சர்வே எண் விபரம் | பொது ஒதுக்கீடு விபரம் | மனைப்பிரிவு எண் | தானப்பத்திர எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜி.சிகாமணி | வார்டு.இ, பிளாக்.3, நகரபுல எண்.14/1,2,3 | 502.76 ச.மீ | 416/2018 | Doc No.2371 நாள்.12.07.2018 |
| 2 | ஏ.சாகுல்ஹமீது, சீனிசேக் | வார்டு.சி, பிளாக்.1, நகரபுல எண்.1 pt, வார்டு.பி, பிளாக்.3, நகரபுல எண்.13 pt | 2658 ச.மீ | 605/2018 | Doc No.3141 நாள்.07.09.2018 |
| 3 | ஏ.சாகுல்ஹமீது, சீனிசேக் | வார்டு.சி, பிளாக்.1, நகரபுல எண்.2/4 | 292.78 ச.மீ | 639/2018 | Doc No.3140 நாள்.07.09.2018 |
| 4 | எம்.முகமது உசேன், மன்சூர்அலி | வார்டு.சி, பிளாக்.3, நகரபுல எண்.10/1 | 524.52 ச.மீ | 838/2018 | Doc No.4216 நாள்.30.11.2018 |
| 5 | கே.பாலசுப்பிரமணியன் | வார்டு–இ, பிளாக்–4, நகரபுல எண்.11/7சி | 845.41 ச.மீ, 129.39 ச.மீ | 719/2018 | Doc No.3891/2018, நாள்.17.10.2018 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 6 | கே.ராஜன் | வார்டு—இ, பிளாக்—3, நகரபுல எண்.2/7, 2/8பி | 207.90 ச.மீ | 80/2018 | Doc No.969/2019, நாள்.08.03.2019 |
| 7 | பி. சண்முகம் | வார்டு –இ, பிளாக்—4, நகரபுலஎண்.11/7 | 1025.62 ச.மீ, 114.82 ச.மீ | 105/2019 | Doc No.972/2019, நாள்.11.03.2019 |

அலுவலகக்குறிப்பு –

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்களை அவர்கள் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காங்களை வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தானபத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம். ந.க.எண். /2019/எப்2

**பொருள்.26**

பரமக்குடி நகரம் – பாலன் நகர் பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்ற ஆட்சேபனை தெரிவித்து திருமதி. செல்வி மற்றும் 11 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No.3426/19 நாள்.01.03.2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கின் விசாரணை 15.03.2019 அன்று உயர்நீதிமன்றத்தில் வரவிருப்பதால் ஆணையாளர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்த திரு. கண்ணன், வழக்கறிஞர் அவர்களை அனுமதிக்கவும், வழக்கிற்கான செலவு தொகையினை அலுவலகத்திலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.606/2019/எப்2

**பொருள்.27**

இந்நகராட்சிக்குட்பட்ட முதுகுளத்தூர் ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாகக் கடைகள் 9 எண்ணம் மற்றும் திரௌபதியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள வணிக வளாகக் கடைகள் 18 எண்ணமும் பொது ஏலம் முலம் குத்தகைக்கு விடப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் வருவாய் ஆய்வாளர் குறிப்பு நாள்.29.10.2018ன்படி கீழ்கண்ட கடைகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால், பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதி கீழ்கண்ட கடைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிய வணிக வளாகம் கட்டுதவற்கு அதன் குத்தகைதாரர்களுக்கு கடையை காலி செய்ய அறிவிப்பு அனுப்பவும் மற்றும் அதற்கான கேட்பினை நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரி விதிப்பு எண் | கடையின் விபரம் | குத்தகை தாரர் |
|---|---|---|---|
| 1. | 4093 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.1 | ஜெ.ஜெயலெட்சுமி |
| 2. | 4094 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.2 | எம்.பி.குமரேசன் |
| 3. | 6023 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.3 | பி.மோகன் |
| 4. | 6096 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.4 | இளங்கதிர் |
| 5. | | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.5 | கே.சேகர் |
| 6. | 6024 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.6 | நா.ரமேஷ் |

| | | | |
|---|---|---|---|
| 7. | 4099 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.7 | வி.ஜெயராமன் |
| 8. | 4100 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.8 | என்.வணிதாமணி |
| 9. | 4101 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.9 | எஸ்.கிருஷ்ணகுமார் |
| 10. | 4102 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.10 | என்.அர்ச்சுணன் |
| 11. | 4103 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.11 | எஸ்.செல்வமணி |
| 12. | 4104 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.12 | பி.சித்திரைச்சாமி |
| 13. | 4105 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.13 | எஸ்.காந்திமதி |
| 14. | 4106 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.14 | ஆர்.வள்ளி |
| 15. | 4107 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.15 | கே.பாலமுருகன் |
| 16. | 4108 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.16 | கே.சண்முகம் |
| 17. | 4109 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.17 | ஆர்.நாகசாமி |
| 18. | 4110 | திரௌபதியம்மன் கோவில் வணிக வளாகக் கடை எண்.18 | ஏ.மாயழகு |

முதுகுளத்தூர் ரோடு கடைகள்

| வ.எண் | வரி விதிப்பு எண் | கடையின் விபரம் | குத்தகை தாரர் |
|---|---|---|---|
| 1. | 4111 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.1 | ரா.ஞானதேவன் |
| 2. | 4112 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.2 | எஸ்.மன்னன் முடி |
| 3. | 4113 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.3 | ரா.சிவப்பிரகாசம் |
| 4. | 4114 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.4 | கா.முத்துப்பொன் |
| 5. | 4115 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.5 | எஸ்.மன்னன் முடி |
| 6. | 4116 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.6 | எம்.மீனாள் |
| 7. | 6022 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.7 | எம்.சங்கர் (கடையினை காலி செய்ய மனு செய்துள்ளார்) |
| 8. | 4118 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.8 | எஸ்.மன்னன் முடி |
| 9. | 4119 | முதுகுளத்தூர் ரோடு வணிக வளாகக் கடை எண்.9 | கே.செல்வராஜ் |

அலுவலகக் குறிப்பு–

மேற்கண்ட வணிக வளாகக் கடைகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால், பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதி மேற்கண்ட கடைகளை இடித்து அப்புறப்படுத்தியும், அதன் கேட்பு நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2992/2018/எச்2)

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.